Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 31 (16 - 09 - 1992) புதன்கிழமை ஓசை 211

## 489 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 489 தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கு வதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. ஏ - பி பட்டியல்களிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கபபட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங் கள் தெரிவிக்கின்றன. இதேவேளை 30 - 08 - 92 இல் நடைபெற்ற கல்விச் சேவைச் சபைக் கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதென முடிவு மேற்கொள்ளப்பட்டி ருப்பதாகவும், இந்த நியமனங்கள் மிக விரைவில் வழங்கப்படும் எனவும் கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஜி. ஜெயக்குமார் (3 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள குடியேற்றங்களின் பாதுகாப்பு; அரசுக்கு எழுந்துள்ள புதிய நெருக்கடி

## ராணுவ பாதுகாப்பு வலயங்கள் எல்லைப் பகுதிகளில் அமைக்க முயற்சி

[கொழும்பு]

வடக்கு - கிழக்கிற்கு உள்ளேயும், எல்லை ஓரமாகவும் உள்ள சிங்களக் குடியேற்றங் களின் பாதுகாப்புக் குறித்து சிறிலங்கா அரசாங்கத்திற்குப் புதிய நெருக்கடி உருவாகியுள்ளது. அண்மைக்காலத்தில் எல்லை ஓர இராணுவ முகாம்களும், காவலரண்களும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாவதைத் தொடர்ந்தே இந் நிலை ஏற்பட் டுள்ளது. இதைத் தொடர்ந்து இராணுவ பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி குடியேற்றங் களுக்கு பாதுகாப்பு அளிப்பதுபற்றி தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

எல்லையோர இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதி கரித்ததைத் தொடர்ந்து, இப் பகுதிகளில் இருந்த சிங்களக் குடியேற்றவாசிகள் பெருமள வில் வெளியேறத் தொடங்கி யுள்ளனர்

இவர்களை தடுத்து நிறுத்த சிங்கள அரசாங்கமும், இரா ணுவமும் பகீரதப் பிரயத் தனம் செய்தும், முயற்சிகள் பலனளிக்கவில்லை. அத்தோடு விடுதலைப்புலிகள் தாக்குதல் களின்போது இராணுவத்தினர் தப்பிஓடுவதால்ராணுவத்தால் தமது பாதுகாப்பை உறுதிப் படுத்த முடியாது என்பதை இக் குடியேற்றவாசிகள் அனு பவ ரீதியாக உணர்ந்துள்ளபின் னரே வெளியேறத் தொடங்கி யதாகத் தெரியவருகிறது

இதன் காரணமாக வடக்கி லும் கிழக்கிலும் பரந்துபட்டுக் காணப்படும் சிங்களக் குடியே ற்றங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நட வடிக்கைகள் குறித்து அரசியல் இராணுவ வட்டாரங்களில் தீவிரமாகப் பரிசீலிக்கப் பட்டு வருகின்றது. இதேவேளை, முன் ஏற்பாடாக, பிரதான சிங்களக் குடியேற்றங்கள் உள்ளபகுதிகளிலும், புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி உள் ளாகும் பகுதிகளிலும் இராணு வப் பாதுகாப்பு வலயங்கள் அமைப்பதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

ஓமந்தையில் கோட்டக் கல்வி நிலையம்:

## இராணுவத்தின் பணிப்பால் கல்வி அதிகாரிகள்குழப்பம்

வவுனியா நகருக்கு வெளியே கோட்டக்கல்வி நிலையம் ஒன் றைச் செயற்பட வைப்பது சம்பந்தமாக வவுனியா கல் வித்திணைக்கள அதிகாரிகள் மத்தியில் பெரும் குழப்பம் எழுந்துள்ளது

வவுனியா நகருக்கு வெளியே கல்வி நிலை சீர் குலைந் திருப்பதால்கிராமப்புற தமிழ் மாணவர்களின் கல்வி பின்ன டைந்துள்ளது. இதனைப் போக்குமாறு வவுனியா கல்வி த்திணைக்களத்திற்கு புகார் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தின் கட்டுப்பாட ற்ற பகுதியான ஓமந்தைப் பிரதேசத்தில் கோட்டக்கல்வி நிலையம் ஒன்றைச் செயல்பட வைப்பதற்கு கல்வித்திணைக் கள மேலிடம் தீர்மானித்தி ருந்தது ஆனால் இராணுவ த்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள செட்டிகுளம் பிரதேச த்தில் கோட்டக்கல்வி நிலை யத்தை செயல்பட வைக்கு மாறு இராணுவ உயர் பீடம் கல்வித்திணைக்களத்திற்கு அறிவித்திருக்கிறதென தெரிய [3 ஆம் பக்கம் பார்க்க]

### தொடர்பகத்தில் பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

1990-ம் ஆண்டு யூலைமாதத் திற்குப்பின்னர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்துவந்த மாவீரர் போராளிகள் குடும் பத்தவர் தமது பெயர்களை [3 ஆம் பக்கம் பார்க்க]

### பலூனுக்கும் தடை

(வவுனியா)

வடபகுதிக்குஉள்ளே பலூன் கொண்டு செல்லப்படுவது சிறி லங்கா இராணுவத்தால் தடை செய்யப்பட்டுள்ளது

வைபவங்களுக்கும் குழந்தை களின் விளையாட்டிற்கும்பயன் படும் பலூனை எவரும் கொண்டு செல்லக் கூடாது [3 ஆம் பக்கம் பார்க்க]

# கிளிநொச்சியில் 10,000 மக்கள் நிவாரணவெட்டை எதிர்த்துமறியல்

## செயலகத்தில் மகஜர் கையளிப்பு

(கிளிநொச்சி)

பல ஆயிரக்கணக்கான மக் கள் கலந்து கொண்டு நடாத் திய மாபெரும் மறியல் போராட்டத்தினால் கிளிநொச்சி அரச செயலகம் நேற்று முன்தினம் செயலிழந் தது. மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் செயலக அதிகாரிகள் எவரும் கடமைக்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது.

மறியல் போராட்டத்தில் ... இருந்தனர். ஒரு கட்டத்தில் மிகவும் ஆவேசம் கொண்ட மக்கள் அரச கட்டடங்களுக்கு சேதம் விளைவிக்க முற்பட்ட போது திருச்சபைகளின் குரு வானவர்கள் பொதுஅமைப்புக்

இப்போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் வேண்டு கோளுக்கிணங்க தென்னிந்திய திருச்சபை பங்குத்தந்தை திரு. அனுகூலன் மகஜர் ஒன்றைத் தயாரித்து

சிறிலங்கா ஜனாதிபதியின்

# ‘சார்க்’ நாடுகளுக்கான விஜயம் அரச முறைப் பயணமல்ல

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ... வில் பாகிஸ்தானுக்கும் நேபா ளத்துக்கும் இந்த மாதம் 24 ... மாதம் 1 ஆம் திகதி பயணமா வார். இந்திய விஜயத்தை

டைந்துள்ளது. இதனைப் போக்குமாறு வவுனியா கல்வித்திணைக்களத்திற்கு புகார் தெரிவிக்கப்பட்டதை அடுத்து

மாறு இராணுவ உயர் பீடம் கல்வித்திணைக்களத்திற்கு அறிவித்திருக்கிறதென தெரிய

[3 ஆம் பக்கம் பார்க்க]

களின்விளையாட்டிற்கும்பயன்படும் பலூனை எவரும் கொண்டு செல்லக் கூடாது

[3 ஆம் பக்கம் பார்க்க]

எல்லைபோர இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, இப்

குடியேற்றவாசிகள் பெருமளவில் வெளியேறத் தொடங்கியுள்ளனர்

இவர்களை தடுத்து நிறுத்த சிங்கள அரசாங்கமும், இராணுவமும் பகீரதப் பிரயத்தனம் செய்தும், முயற்சிகள் பலனளிக்கவில்லை. அத்தோடு விடுதலைப்புலிகள் தாக்குதல்களின்போது இராணுவத்தினர்

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்பதை இக் குடியேற்றவாசிகள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளபின்னரே வெளியேறத் தொடங்கியதாகத் தெரியவருகிறது

இதன் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் பரந்துபட்டுக் காணப்படும் சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதற்கு

வடிக்கைகள் குறித்து அரசியல் இராணுவ வட்டாரங்களில் தீவிரமாகப் பரிசீலிக்கப் பட்டு வருகின்றது. இதேவேளை, முன் ஏற்பாடாக, பிரதான சிங்களக் குடியேற்றங்கள் உள்ளபகுதிகளிலும், புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாகும் பகுதிகளிலும் இராணுவப் பாதுகாப்பு வலயங்கள் அமைப்பதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

# கிளிநொச்சியில் 10,000 மக்கள் நிவாரணவெட்டைஎதிர்த்துமறியல்

## செயலகத்தில் மகஜர் கையளிப்பு

(கிளிநொச்சி)

பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு நடாத்திய மாபெரும் மறியல் போராட்டத்தினால் கிளிநொச்சி அரச செயலகம் நேற்று முன்தினம் செயலிழந்தது.

அண்மையில் சிறிலங்கா அரசு மேற்கொண்ட நிவாரண வெட்டைக் கண்டித்தே பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இவ்வாறு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

மேற்படி மக்கள் போராட்டத்திற்கு ஆதரவாகவும் நிவாரண வெட்டைக் கண்டித்தும் கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து வர்த்தக நிலையங்களும், அரச திணைக்களங்களும் மூடப்பட்டன.

காலையே மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு செயலகத்தைச் சூழநின்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதனால் செயலக அதிகாரிகள் எவரும் கடமைக்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் சிறிலங்கா அரசிற்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு இருந்தனர். ஒரு கட்டத்தில் மிகவும் ஆவேசம் கொண்ட மக்கள் அரச கட்டடங்களுக்கு சேதம் விளைவிக்க முற்பட்ட போது திருச்சபைகளின் குருவானவர்கள் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் தலையிட்டு அவர்களைத் தடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தென்னிந்திய திருச்சபை பங்குத்தந்தை திரு. அனுகூலன் மகஜர் ஒன்றைத் தயாரித்து கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளரிடம் கையளித்தார்.

# எந்நிலையிலும் நிவாரண வெட்டு இனப் படுகொலையாகவே அமையும்

## -மகஜரில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

எந்த தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாகவும் தாங்கள் நிவாரணத்தை குறைக்க நடவடிக்கை எடுத்தாலும் அது மனிதாபிமானமற்றதாகவும், மிக மோசமான, மறைமுகமான இனப் படு கொலையாகவுமே அமையும் என்பதை தங்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத சூழ் நிலைக்குத் தளளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு சிறிலங்கா அரசின் நிவாரண வெட்டை எதிர்த்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட மக்களால் சிறிலங்கா அரசிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது சிறிலங்காவில் மிகவும் பின்தங்கிய தோர் மாவட்டமான கிளிநொச்சியில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலும் தமது உழைப்பால் சிறிலங்காவின் உணவுத் தேவையில் கணிசமான பகுதியை (நெல்) உற்பத்தி செய்யும் தொழிலாளர்களாக, விவசாயிகளாக இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் இந்த நிலையிலும் கூட தமது உழைப்பால் சிறிலங்கா அரசிற்கான பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துள்ளனர். இருந்த போதிலும் தமது வாழ்க்கையை வறுமையுடனேயே போக்கி வந்துள்ளனர்.

இவ் வேளையில் நிவாரணத்தை அரைப்பங்காக குறைப்பதாக சிறிலங்கா அரசு எடுத்துள்ள முடிவானது கிளிநொச்சி மாவட்ட இடம் பெயர்ந்த மக்களை மிகவும் கடுமையாகப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### தபால் திணைக்களத்தின்

# அடையாள அட்டைகள் இருவாரங்களில் கிடைக்கும்

தபால் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடையாள அட்டைகள் இனிமேல் வடபிராந்திய தபால திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளன. இதனால் வடபகுதி விண்ணப்பதாரிகளுக்கு இருவாரங்களில் திணைக்கள அடையாள அட்டை கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனுமதி வடபிராந்திய பிரதிமா தபாலதிபர் திரு. எஸ். எம். சேது காவலருக்கு தபால் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது

இது வரை காலமும் தபால் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு பல மாதங்களின் பின்பு அடையாள அட்டைகள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (42)

# கப்பலில்செல்லும் நோயாளர் 20ஆம் திகதி சமுகமளிக்குக

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் மேலதிக சிகிச்சை பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மற்றொரு தொகுதி நோயாளர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி ''குபண'' கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

எனவேகொழும்பில்சிகிச்சை பெறுவதற்காக பதிவு செய்த நோயாளர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 00 மணிக்கு முன்னர் யாழ் போதனா வைத்திய சாலைக்கு சமுகமளிக்க வேண்டும் என வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளர்கள் வரும் பொழுது இரண்டு நாட்களுக்குப் போதுமான உணவு நீர் மற்றும் மருந்து பாவிப்பவர்களானால் ஒரு வாரத்திற்குத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# தெரிவுக்குழுவின்முடிவிற்த முஸ்லிம் லீக்காத்திருக்கும்

[கொழும்பு]

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழு முஸ்லிம்லீக் முன்வைத்த யோசனைகள் தொடர்பாக அறிக்கை விடும்வரை காத்திருக்க - முஸ்லிம் லீக் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் கடந்த வாரம்கூடி இனப் பிரச்சினை குறித்து விரிவாக ஆராய்ந்தது என்றும் அப்போதே இது குறித்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தெரிவுக் குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை அடுத்த நடவடிக்கைக்காக காத்திருப்பது என்றும்,

மத்திய மாகாணத்தில் காணி விநியோகத்தில் கடைபிடிக்கப்படும் நடைமுறையினால் முஸ்லிம் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து லீக் ஆராய்ந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### சிறிலங்கா ஜனாதிபதியின்

# 'சார்க்' நாடுகளுக்கான விஜயம் அரச முறைப் பயணமல்ல

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் 'சார்க்' நாடுகளுக்கான விஜயம் ஒரு சம்பிரதாய பூர்வமான அரச முறைப் பயணம் அல்லவென்றும் சார்க்' சம்பந்தமான விடயங்கள் குறித்தே ஆராயப்படும் என உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

சார்க் அமைப்பின் தலைவராகப் பணிபுரிபவர் தமது பதவிக்காலத்தில் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றுக்கும் விஜயம் செய்வதே சம்பிரதாயம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி முதலில் பாகிஸ்தானுக்கும் நேபாளத்துக்கும் இந்த மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை விஜயம் செய்வார். இவர் இந்த விஜயங்களை முடித்துக் கொண்டு நாடு திரும்புவார். பின்னர் இந்தியவுக்கு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி பயணமாவார். இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு பூட்டானுக்கும், பங்களதேசுக்கும் விஜயம் செய்து விட்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பு திரும்புவார். அவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப்பகுதி அகதிகளுக்கு புனர்வாழ்வு கழகம் உதவி

(முல்லைத்தீவு)

வன்னிப்பகுதியில் சிறிலங்காப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்து உடைமைகளை இழந்து இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு குடிசைகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது. முல்லைத்தீவு, மணலாறு, வவுனியாப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவ நடவ

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தியாக தீபம் திலீபனுக்கு தமிழீழம் எங்கும் மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைக்காக தியாக மரணம் அடைந்த தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின இந்நினைவு நாட்களை ஒட்டி தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வீதிகள் தோறும் சிவப்பு மஞ்சல் வர்ணத் தோரணங்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன வீதிகளுக்கு குறுக்கேதிலீபனின் தீர்க்க தரிசனம் மிக்க வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன.

பாடசாலைகள், கல்வி நிலையங்கள். அரச, தனியார் அலுவலகங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்கள் உட்பட பல்வேறு பொது இடங்களிலும், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி நிலையங்கள் போன்ற பல்வேறு மக்கள் கூடும் இடங்களிலும் விசேடமாக அமைக்கப்பட்ட அலங்காரப்பந்தல்களில் தியாகி திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகிதிலீபன் நினைவாக இன்றையசிரமதானபணிகள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வின் அங்கமாக இன்று பல்வேறு சிரமதானப்பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் வட்டப்பிரிவில் இருபாலை பயிற்சி முகாம் வீதியிலும் கோப்பாய் வைத்தியசாலையிலும் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பருத்தித்துறை வட்டப் பிரிவில் பொலிகண்டி மேற்கு மக்களால் மானாங்கணைப் பொதுக்கிணறு சிரமதானம் மூலம் துப்பரவாக்கப்படவுள்ளன.

கரவெட்டி வட்டப் பிரிவில் கப்பூது மக்களால் கப்பூது சனசமூக நிலைய ஆதரவில் கப்பூது கால்வாய் சிரமதானம் மூலம் திருத்திஅமைக்கப்படவுள்ளன.

மழைநீரைச் சேமிப்போம்
விளைபொருளைப் பெருக்குவோம்

## வரி விளம்பரம்

**your watches, Clocks & Radios**

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we rep ir with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி-4970)


### தவறி விட்டது

செல்லத்துரை மகேஸ்வரி என்பவர் 1992-09-14 திங்கட்கிழமை கைதடியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பராய்க்கும் பஸ்ஸில் பயணம்செய்த போது கைக்குட்டையில்முடிந்தபடி சங்கிலி ஒன்றும் "C" அடையாளம் பதித்த மோதிரம் ஒன்றும் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும்.
( 3181 )

தம்பையா வேலாயுதம் (பரந்தன், முரசுமோட்டை) என்பவருடைய அடையாள அட்டை சாவகச்சேரி - யாழ்ப்பாணத்திற்குமிடையில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 211. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (3185)

### தமிழ் மொழிமூலம் பாடநெறி இல்லை

(கொழும்பு)

இணைந்த பல்கலைக்கழகக் கல்விக்காக வட மத்திய மாகாண சபையினால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மொழிமூல பாடநெறிகள் போதிக்கப்படுவதில்லை என மேற்படி பாடநெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

### புதிய இன தக்காளி அறிமுகம்

யாழ்ப்பாணம் கமத்தொழில் திணைக்களம் புதிய இனத் தக்காளி விதையை அறிமுகப் படுத்தியுள்ளது இது வரட்சியைத் தாங்கக் கூடியது என்று தெரிவிக்கப் படுகிறது.


## மெடி எயிட்ஸ் கிளினிக்

இல. 88, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

### "பற்சிகிச்சைப் பிரிவு"

இன்று [16 9-92] பிற்பகல் 4-33 மணி தொடக்கம் 6-10 மணி வரை உள்ள சுப நேரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு தினமும் பிற்பகல் 3-30 மணி தொடக்கம் 5-00 மணி வரை இயங்கும் என்பதை அறியத்தருகிறோம்.

DR. வை. தியாகராசா
உரிமையாளர்
(3173)


## நெஞ்சில் நிறைந்தவனின் 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரத்தாயின் மடியில்
11 - 08 - 1967

தமிழீழ மண்ணில்
16 - 09 - 1991



### 2 - வது லெப். கந்தசாமி

(வேலுப்பிள்ளை மகேந்திரன்)

(16-09-1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிங்களப் படைகளுடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார் )

வீரப்புலியே எங்கே சென்றாய் வெற்றி கொண்ட தோள் எங்கே.
பாருக்குவமை பகரநின்ற பண்புபெற்ற நா எங்கே
போருக்கு உதவும் கையெங்கே பொன்னை யொத்த மனமெங்கே
ஊருக்கு உதவ வருவாயோ உன்னைக் காண விரைவோம்.
இவருடன் இந்நாளில் மரணித்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

கற்கோவளம்,
பருத்தித்துறை.
- குடும்பத்தினர்
( 3175 )

## 1ஆம் ஆண்டு 35ஆம் நாள் நினைவஞ்சலி

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 16

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு-ஏறாவூர்ப் பகுதியில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**மைக்கல்** (நல்லையா பாரதிதாசன் - ஏறாவூர், மட்டகளப்பு)

**சதீஷ்** (காமாட்சிசுந்தரம் சதீஷ்குமார் - ஏறாவூர், மட்டக்களப்பு)

திருக்கோணமலை - நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். சங்கிலி** (மாரிமுத்து மகேந்திரராசா - சிவன் கோவிலடி, திருக்கோணமலை)

**சரவணன்** (சோமசுந்தரலிங்கம் அருட்குமார் - லிங்க நகர், திருக்கோணமலை)

**யோகன்** (தம்பிராசா சந்திரமோகன் - சாம்பல்தீவு, திருக்கோணமலை)

**கோணேஷ்** (கந்தையா சிவனருள் - சணல் ஒழுங்கை, திருக்கோணமலை)

இதே முற்றுகையில் வீரச்சாவெய்திய நாட்டுப் பற்றாளரான

**கந்தசாமி** (கந்தசாமி - நிலாவெளி, திருக்கோணமலை)

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 4 தமிழர்கள்

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். கனெக்ஸ்** (ஞானமுத்து பேணாட் [வேலன்] - பாண்டிருப்பு, கல்முனை, அம்பாறை)

**ராஜ்குமார்** (நல்லதம்பி சந்திரதாஸ் - பாண்டிருப்பு, கல்முனை, அம்பாறை)

**நீலன்** (மயில்வாகனம் சிவகுமார் - கடற்கரை வீதி, தம்பிலுவில், அம்பாறை)

1987ஆம் ஆண்டு வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**யோகன்** (சுப்பிரமணியம் தயாநிதி - பாரதிபுரம், வவுனியா)

1989ஆம் ஆண்டு கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கணேஷ்** (கு. சந்திரமோகன் - கருநாட்டுக்கேணி)

1990ஆம் ஆண்டு மன்னார் - விடத்தல்தீவுப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ஜெயா** (சந்தியோகு பெரேரா தேவசகாயம் பெரேரா - நொச்சிக்குளம், உயிலங்குளம், மன்னார்)

யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். நிமலன்/சிட்டு** (பாலசிங்கம் ஜெயவதனன் - தும்பளை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுபாசினி** (சரஸ்வதி சின்னக்கண்டு - மடத்துப்புலவு, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, யாழ் )

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -


**கப்டன் சங்கிலி** (கதிரமலை அமரசிங்கம் - பண்டாரியார்வெளி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

**கடடன் வில்மட்** [கணபதிப்பிள்ளை எதிர்மன்னசிங்கம் - எருவில், களுவாஞ்சிக்குடி, மட்டககளபபு]

**2-ம் லெப். பிரியன்** (சின்னத்தம்பி யோகராசா - ஆரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். கோட்டை முற்றுகையின் போது 16 09 1990 அன்று வீரச்சாவு அடைந்த



### வீரவேங்கை சுபாசினி

[சின்னக்கண்டு சரஸ்வதி]

தமிழ்த்தாயின் மடியில்
20 . 04 . 1973

தமிழீழ மண்ணில்
16 . 09 . 1990

அடிமைச் சின்னமாம் கோட்டை தன்னை
அடியோடு அகற்றி எம் அல்லல் போக்கி
விடிவுதர வேண்டுமென்றோ வேங்கையாகி
விரைந்திட்ட வீரமகள் சுபாசினியின்
அடியொன்றிச் சென்றிந்த அவனிதன்னில்
அமைத்திடுவோம் தமிழீழம் அகமகிழ்ந்தே!

இமையாணன் [3183] -குடும்பத்தினர்

**காசன்** (அல்லிராசா யோகேந்திரம் - பாடசாலையடி, பூநகரி-கிளிநொச்சி)

**சுரேஷ்** (கந்தையா கனகலிங்கம் - எல்லுக்காடு, உருத்திரபுரம்-கிளிநொச்சி)

**சுபன்** (கோவிந்தசாமி கணேசசேகரன்-439, தர்மபுரம்-கிளிநொச்சி)

**கிருஷ்ணா|மோகன்** (சிவகுமார் சுதன்-குமாரதாஸ் வீதி, பன்றிசுட்டான், கண்டாவளை, பரந்தன்-கிளிநொச்சி)

வலிகாமம் தாக்குதற் படைப்பிரிவுப் பொறுப்பாளர்-

**மேஜர் பவா** (நாராயணன் தனபாலன்-தும்பளை, பருத்தித்துறை-யாழ்ப்பாணம்)

**லெப் பூபதி** (பிறேமலதா இராசமாணிக்கம் - சந்தி ஒழுங்கை, வல்வெட்டித்துறை-யாழ்ப்பாணம்)

**லெப். டொமினிக்மாஸ்ரர்** ...

வர்களுக்கு தமிழ் மொழிமூல பாடநெறிகள் போதிக்கப்படுவதில்லை என மேற்படி பாடநெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## புதிய இன தக்காளி அறிமுகம்

யாழ்ப்பாணம் கமத்தொழில் திணைக்களம் புதிய இனத் தக்காளி விதையை அறிமுகப் படுத்தியுள்ளது இது வரட்சியைத் தாங்கக் கூடியது என்று தெரிவிக்கப் படுகிறது.

---

(வேலுப்பிள்ளை மகேந்திரன்)

(16-09-1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிங்களப் படைகளுடனான நேரடி மோதலில் வீரச் சாவடைந்தார் )

வீரப்புலியே எங்கே சென்றாய் வெற்றி கொண்ட
தோள் எங்கே.
பாருக்குவமை பகரநின்ற பண்புபெற்ற நா எங்கே
போருக்கு உதவும் கையெங்கே பொன்னை யொத்த
மனமெங்கே
ஊருக்கு உதவ வருவாயோ உன்னைக் காண விரைவோம்.
இவருடன் இந்நாளில் மரணித்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.


கற்கோவளம், - குடும்பத்தினர்
பருத்தித்துறை. (3175)

---

**1ஆம் ஆண்டு 35ஆம் நாள்**

# நினைவஞ்சலி





**2-ம்லெப்.எட்வின்**
[சின்னையா பிரபாகரன்]

**கப்டன் சுபாஸ்கர்**
[சோமசுந்தரம் சக்திவேல்]

(செம்மலை, மணலாறு)

| பிறப்பு | வீரச்சாவு | பிறப்பு | வீரச்சாவு |
|---|---|---|---|
| 11-09-1972 | 16-09-1991 | 04-05-1965 | 12-08-1992 |

இருளுடன் முரண்பட்டு
ஒன்றுபட்டு நாம் நிற்க
காற்றுடன் உடன்பட்டு
சூரியனைக் கருத்தரித்தீர்...
.. .....
இதுவரை உங்கள்
உருவங்கள் மறைந்தது
உண்மையென எங்கள்
இதயங்கள் ஏற்கவில்லை ..
... -- ...
போர்க்காலம் இதுவென்று

புயல்களைத் துதிக்கின்றோம் ..
உருவாகும் தேசத்தின்
கருவாக முயல்கின்றோம்,
தெருவான வீரரின் பாதவழி
திரும்பிப் பார்க்கிறோம்...
உறுதி நெஞ்சில் உறுதியென
உறுதிப் படுத்திக் கொள்கிறோம்.
முடியவில்லையே...!
பாச நெருப்பு... பஞ்சு நெஞ்சு
பிரித்துவிட முடியவில்லையே!

(சேர்ந்தொன்றாய் களத்திடையே இவர்களுடன் உரமான மாவீரர் அனைவரையும் வணங்கி நிற்கின்றோம்.)

செம்மலை. (3165) - குடும்பத்தினர்

---

வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -
**கப்டன் ஜெயா** (சந்தியோகு பெரேரா தேவசகாயம் பெரேரா - நொச்சிக்குளம், உயிலங்குளம், மன்னார்)

யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -
**2-ம்லெப். நிமலன்/சிட்டு** (பாலசிங்கம் ஜெயவதனன் - தும்பளை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
**சுபாசினி** (சரஸ்வதி சின்னக்கண்டு - மடத்துப்புலவு, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, யாழ் )

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய -
**கப்டன் சங்கிலி** (கதிரமலை அமரசிங்கம் - பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)
**கடடன் வில்மட்** [கணபதிப்பிள்ளை எதிர்மன்னசிங்கம் - எருவில், களுவாஞ்சிக்குடி, மட்டககளபபு]
**2-ம் லெப். பிரியன்** (சின்னத்தம்பி யோகராசா - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)
**தோத்திரன்** (கந்தப்பு மணியன் - 2-ம் குறிச்சி, பழுகாமம், மட்டக்களப்பு)
**சுரேன்** (இராஜரட்ணம் நவநீதன் -துறைநீலாவணை, மட்டக்களப்பு)
**குலேஸ்** (வைரமுத்து இளங்கோ - வெள்ளைமடு, வாகரை, மட்டக்களப்பு)
**லெப். கிறிஸ்ரி** (பாக்கியதுரை தங்கராசா - 1 ஆம் வட்டாரம், குச்சவெளி, திருக்கோணமலை)
**2 ம் லெப் குட்டி** (தங்கராசா கிருஷ்ணதாஸ் -உப்புவெளி, திருககோணமலை)
**வண்ணன்** [சிவஞானசுந்தரம் ஜீவா - 2 ஆம் வட்டாரம், வீரஞ்சோலை, திருக்கோணமலை]
**வாணன்** [ஆறுமுகம் கணேசமூர்த்தி - 19 மாவடிச்சேனை, மூதூர், திருக்கோணமலை]
**லெப். சிரான்** [விசுவலிங்கம் சிவனேசன் - பெரியகுளம், நெடுங்கேணி, மணலாறு]
**2-ம்லெப். ரவிராஜ்** [மல்லாகன் சுந்தரமோகன் - நயினாமடு, நெடுங்கேணி, மணலாறு)
**காவியநாயகன்** (மணியம் சிவஞானம் - கொக்குத்தொடுவாய், மணலாறு)
**எட்வின்** (சின்னையா பிரபாகரன்-அலன்வீதி, செம்மலை, அளம்பில், மணலாறு)
**2ஆம்லெப்- சார்ஜகா** (மேரி மாக்கிறெற் தங்கராஜா - வட்டக்கண்டல், மன்னார்)
**ஜனனி** (கமலாதேவி கறுப்பையா -இசைமாலைத்தாழ்வு முருங்கன், மன்னார்)
**றொசிற்றா** (செல்வி சுப்பு - பேசாலை மன்னார்)
**2ஆம் லெப். நவராஜ்** (பிறேமதாசா பிறேமரட்ணம் -மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா)
**காந்தி** (மாரிமுத்து சதாசிவம் ரவிச்சந்திரன்-மன்னார் வீதி வவுனியா)
**சகாயகுமார் / புலவன்** (வடிவேலு சுந்தரகுமார்- மகாறம்பைக்குளம், வவுனியா)
**லெப். சுந்தர்** (நல்லையா கோவிந்தராசா - செவ்வபுரம், முல்லைத்தீவு)
**துலாஞ்சலி** (சித்திராதேவி சோமசுந்தரம் - புளியங்குளம், ஒ டிசுட்டான், முல்லைத்தீவு)
**கப்டன் பகீரதன்** (கிருஷ்ணபிள்ளை அருணகிரிநாதன்—403, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி-கிளிநொச்சி)
**கப்டன் காஸ்ரோ** (இராமசாமி குமார்—இரத்தினபுரம் - கிளிநொச்சி)
**இதயா** (தேவரஞ்சினி தம்பிராசா - நாகேந்திரபுரம், புளியம்பொக்கனை - கிளிநொச்சி)
**சிரஞ்சீவி** (வசந்தமணி ஏகாம்பரம்-வன்னேரிக்குளம்- கிளிநொச்சி)

---

அடியோடு அகற்றி எம் அல்லல் போக்கி
விடிவுதர வேண்டுமென்றோ வேங்கையாகி
விரைந்திட்ட வீரமகள் சுபாசினியின்
அடியொன்றிச் சென்றிந்த அவனிதன்னில்
அமைத்திடுவோம் தமிழீழம் அகமகிழ்ந்தே!

இமையாணன் [3183] -குடும்பத்தினர்

---

**காசன்** (அல்லிராசா யோகேந்திரம் - பாடசாலையடி, பூநகரி-கிளிநொச்சி)
**சுரேஷ்** (கந்தையா கனகலிங்கம் - எல்லுக்காடு, உருத்திரபுரம்-கிளிநொச்சி)
**சுபன்** (கோவிந்தசாமி கணேசசேகரன்-439, தர்மபுரம்-கிளிநொச்சி)
**கிருஷ்ணா|மோகன்** (சிவகுமார் சுதன்-குமாரதாஸ் வீதி, பன்றிசுட்டான், கண்டாவளை, பரந்தன்-கிளிநொச்சி)

வலிகாமம் தாக்குதற் படைப்பிரிவுப் பொறுப்பாளர்-
**மேஜர் பவா** (நாராயணன் தனபாலன் - தும்பளை, பருத்தித்துறை-யாழ்ப்பாணம்)
**லெப் பூபதி** (பிறேமலதா இராசமாணிக்கம் - சந்தி ஒழுங்கை, வல்வெட்டித்துறை-யாழ்ப்பாணம்)
**லெப். டொமினிக்மாஸ்ரர்** (நடேசன் குமரேசன்- டொமினிக் வீதி, ராஜ வீதி, நீர்வேலி வடக்கு-யாழ்ப்பாணம்)
**லெப்.மாதவன்** (யோகர் குணராஜ்-4ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்
**லெப்.சண்** (வல்லிபுரம் புவனேந்திரராசா - தச்சன் தோப்பு கிழக்கு, நாவற்குழி-யாழ்ப்பாணம்)
**2 ம் லெப்.கந்தசாமி** வேலுப்பிள்ளை மகேந்திரன் - வடக்குத்தெரு, கற்கோவளம், பருத்தித்துறை- யாழ்ப்பாணம்)
**2.ம் லெப்.எட்றிச்** (சிவசாமி கிருபாகரன்-திக்கம் சந்தி, அல்வாய் மேற்கு - யாழ்ப்பாணம்)
**2.ம் லெப். இரட்ணம்** (நித்தியானந்தசிவம் லகுபரன்-திலீபன்வீதி, கோண்டாவில்கிழக்கு- யாழ்ப்பாணம்)
**டொறின்** (தவராணி யோககுரு - கிழக்குத்தெரு, வேம்படி, வல்வெட்டித்துறை - யாழ்ப்பாணம்)
**றொசானி** (தேவராணி சிவசுப்பிரமணியம் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை-யாழ்ப்பாணம்)
**லோஜி** (கௌரிமலர் தர்மலிங்கம்-புனர்வாழ்வுத்திட்டம் கேடில்ஸ் நகர், கெற்பெலி, மிருசுவில் - யாழ்ப்பாணம்)
**காஞ்சனா** (சாந்தி அருமைத்துரை - சாவற்கட்டு, சுதுமலை தெற்கு, மானிப்பாய்-யாழ்ப்பாணம்)
**திலீப்** [தங்கவடிவேலன் கிருஷ்ணகுமார்-சூறாவத்தை, சுன்னாகம் - யாழ்ப்பாணம்)
**கல்கத்** [மார்க்கண்டு மதனரூபன் (பழம்) - விக்னேஸ்வரா வீதி, புத்தூர் கிழக்கு-யாழ்ப்பாணம்)
**டயானி | டானியல்** (நடராசாவாசு தேவன் நீதிமன்ற வீதி, மல்லாகம்-யாழ்ப்பாணம்)
**சேகர்** [ஏகாம்பரம் குணசேகர்-அருணா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)
**ஈஸ்வரன்** (புஷ்பராஜா கஜேந்திரன்-சித்தன்கேணி, வட்டுக்கோட்டை-யாழ்ப்பாணம்)
**பிரதீப்** (பத்மநாதன் லட்சுமணன்- பேச்சியம்மன் கோவிலடி, 4-ம் கட்டை, கோப்பாய்-யாழ்ப்பாணம்)
**இளஞ்செழியன்** [மருதலிங்கம் நிதீஷ்குமார்-மாதா கோவிலடி, மல்லாகம்-யாழ்ப்பாணம்]
**சுநளி** [தெய்வேந்திரம் வசந்தராசா - சாவற்காடு, சுதுமலை தெற்கு, மானிப்பாய்-யாழ்ப்பாணம்]
**மகான்** [முருகேசபிள்ளை தியாகராசா-18, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5052)

## சிந்தனைக்கு

துணிந்து செயல்படவேண்டிய நேரத்தில் கண்மூடித்தனமாக ஒருவரைப் போற்றிப்புகழ்வது சற்றும் பலனற்றது; பல வேளைகளில் இடைஞ்சல்களையும் வேறு சில வேளைகளில் வேதனைகளையும் உண்டாக்கும்

— மகாத்மா காந்தி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16- 09- 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05


## 'ஐலண்டின்' ஏமாற்று

"என்ன நோக்கத்தை அடைவதற்காக இராணுவம் இப்போரை தொடர்ந்து நடத்துகின்றது என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது'' இவ்வாறு ஐலண்ட்பத்திரிகை தனதுகடந்த வார இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் ''இராணுவம் என்ன இறுதி இலக்கை அடைவதற்குப் போரை நடத்துகின்றது என்பது தெளிவாக இல்லை. இராணுவததின் திட்டம் எதுவாக இருந்தாலும் அது அரசாங்கத்தின் இலக்குகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாது என்பது தெளிவு. இன்னும் மேலே சொல்வதானால், அரசாங்கத்தின் அரசியல் தலைமைத்துவத்தை நிலை நாட்டவே படையினர் போரிடுகின்றனர் வேறுவார்த்தைகளில் கூறினால், இராணுவ அதிகாரிகளின் சிந்தனை அரசியல் இலக்குகள் குறித்துக் குழம்பிப் போயுள்ளது. இந்நிலையில்தான் நாடு எதை நோக்கிப் போகின்றது எனக் கேட்க வேண்டியுள்ளது" எனவும் விசனம் தெரிவித்துள்ளது.

சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக தீவிரமாக நடந்துவரும் ஆயுதப் போராட்டம் குறித்து இதுவரை 'ஐலண்ட்' பத்திரிகைக்கு ஏற்படாத கவலையும், கரிசனையும் திடீரென இப்பொழுது ஏற்பட்டுள்ளது. ஆனால் இதுவரை போர் குறித்தும், இராணுவ வெற்றிகுறித்தும் எழுதிவந்த 'ஐலண்ட்' பத்திரிகைக்கு சடுதியாக அதற்கான இலக்குத் தெரியாமல் போனதன் மர்மம் என்ன என்பதுதான் ஆச்சரியமாகவுள்ளது.

இதுவரை போரில் கொல்பவர்கள் சிங்களவர்களாகவும், கொல்லப்படுபவர்கள் தமிழர்களாகவும் இருக்கும்/இருக்கவேண்டும் என்றே 'ஐலண்ட்' பத்திரிகை கருதியது. அதாவது, கொல்லப்படுபவர்கள் புலிகளும், அதன் தலைவர்களாகவும், மற்றும் தமிழ் மக்களுமாக இருக்கும் என்றே இப்பத்திரிகை கருதியது ஆனால், சிங்களச் சிப்பாய்களும், தமது 'புகழ்பூத்த' தளபதிகளும் போரில் மரணமடைபவர்களில் அடங்குவார்கள் என அவை கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. இக்கற்பனை கலைந்த பின்னர் தான், அதாவது இழப்புக்கள் சிங்களத் தரப்பில் ஏற்பட்ட பின்னர்தான் போருக்கான காரணம் குறித்து 'ஐலண்ட்' கேட்கின்றது.

# எமது மக்கள் நிச்சயம் சுதந்திர தமிழீழம் காண்பர்

## தியாகி திலீபனின் நம்பிக்கை

அன்பிற்கும் மதிப்பிற்குரிய தமிழீழ மக்களே!

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நிற்க வலுவில்லை. இருந்துகொண்டே



பேசுகிறேன். நாளை நான் சுயநினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால் தான் இன்று உங்களுடன் பேச வேண்டும்என்று விரும்பினேன் நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். ஏற்கனவே 650 பேர் இலட்சியத்துக்காக மரணித்து விட்டனர்.

மில்லர் கடைசியாகப் போகும்போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான். ''நான் எனது தாய்நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலைஅடையும் காட்சியை என்னாற் காணமுடியாமல் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும்'' எனக் கூறிவிட்டு வெடிமருந்துகளை உடைய வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன் சென்ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தனர். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். நான் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவரிடம் அனுமதி கோரியபோது திலீபன் நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன்! எனக் கூறி எனக்கு உற்சாகம் ஊட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர் தான் உங்களுக்குக்கிடைத்துள்ளார். நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன். இப்போது விளங்குகிறது எனக்கு எனது தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சிவெடிக்கட்டும். நாங்கள் நிச்சயமாகத் தமிழீழம் காண்போம். அதை வானிலிருந்து

> சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த தியாக வேங்கை திலீபன் உண்ணாவிரதத்தின் இரண்டாம்நாள் தன் முன்னால் குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஆற்றியஉரை

எனது 650 தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனரீதியாக தற்போது உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

விடுதலைப் புலிகள் தமது உயிரிலும் மேலாக சிறுவர்களை, சகோதரிகளை, தாய்மார்களை, தந்தையர்களை நினைக்கின்றார்கள்.

உண்மையான உறுதியான இலட்சியம் எமது இலட்சியம் அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள் எனது இறுதி விருப்பமும் இதுதான்.

# பொஸ்னியாவிற்கு மேலாக விமானங்கள் பறக்க தடை விதிக்குக

## ஐரோப்பிய சமூகம் கோரிக்கை

[ஹட்பீல்ட்]

யூகோஸ்லாவிய குடியரசான பொஸ்னியாவுக்கு மேலாக இராணுவ விமான சூன்ய பிரதேசம் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் செயல் முறைகளில் யூகோஸ்லாவியா பங்குபற்றாதவாறு தடுக்கப்பட வேண்டும் என்றும் கடந்த சனிக்கிழமை ஐரோப்பிய சமூக வெளிவிவகார அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விமான சூன்யப் பிரதேசம் ஏற்படுத்தப்பட்டால் இப்பிரதேசம் உள்ளூர் விமான நிலையங்களால் கண்காணிக்கப்படும் என்றும் தென் ஈராக் விமான சூன்யப் பிரதேசத்தைப் போல இராணுவ

சமாதான மாநாட்டுக்குப் பின் சண்டையை முடிப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதால் சேர்பியா மீது புதிய தடைகளை விதிப்பதில்லை என்றும் தீர்மானித்துள்ளனர்.

சேர்பிய ஆயுத பாணிகள் தங்கள் கனரக ஆயுதங்களை சரஜிலோவில் ஐ. நா. கண்காணிப்பில் வைத்துள்ளனர். பொஸ்னியத் தலைநகரில் சண்டையை முடிக்க இது முதல் நடவடிக்கையாக அமையும் எனவும் கருதப்படுகிறது.

## உறுதிப்படுத்திய பின்னரே விளக்கமளிக்கவும்

(கொழும்பு)

கொழும்பில் வழிப்பயணிகளையோ வீட்டில் இருப்போரையோ சோதனையிட அல்லது விசாரிக்க முற்படுவோர் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்த பின்புதான் அவர்களுக்கு

திணைக்களத்தைச் சேர்ந்தவர்களானால் நிச்சயம் தங்கள் அடையாள அட்டையை காண்பிப்பார்கள் என்றும்,

ஏமாற்றுப் பேர்வழிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படு

## திலீபன்

### 2-ம் நாள் (16-9-1992)

சொட்டு நீர் கூடச் சுவைக்காத பிள்ளையவன்
வட்ட முகம் இரண்டாம் நாள் வாடியது ....
பட்டு முகிலெல்லாம் பயணம் செய்கின்ற
வெட்ட வெளிவானம் வெறித்துக் கிடந்தது!

சங்கிலியன் ஆண்ட சரித்திரப் பூமியிலே
எங்கள் திரியொன்று எரியத் தொடங்கியது!
பொங்கிவரும் இளந்தென்றல் புழுங்கியழ ....
தங்க மகன் மக்கள்முன் உரை பகன்றான்!

கண்ணாடி போட்ட .. கண்கள் வாடிவர ....
பொன்நாடாம் தமிழ் மண்ணில் பிறந்த எங்கள்
வெண் முத்தின் ஒளியுடல் வதங்கியது. - எங்கும்
மின்னலும் இடியும் சேர்ந்துநடம் ஆடியது!

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# திணைக்கள ஆவணங்கள் மீட்டெடுக்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

மாதகல், இளவாலை, அளவெட்டி ஆகிய பகுதிகளில் இராணுவத்திடம் சிக்கிக் கொண்ட அரச திணைக்களங்களின் ஆவணங்களை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு சென்றிருக்கும் யாழ். அரசாங்க அதிபர் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்துடன் நடாத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் மேற்படி பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலக மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்தியலிங்கம் அவர்களிடம் தமது விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர். [க]

# உலகத் தமிழர் மாநாடு சென்னையில் நடைபெறும்

(சென்னை)

உலகத் தமிழர் மாநாடு டிசம்பர் 17 ஆம், 19 ஆம் திகதிகளில் சென்னையில் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கட்டுரை படித்தல், கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சி என்பன இம்மாநாட்டின் சிறப்பு அம்சங்களாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''21 ஆம் நூற்றாண்டை நோக்கி தமிழர்கள்'' என்னும் கருப்பொருளைத் தழுவிய ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன என்றும்,

ஆய்வுக் கட்டுரையின் சுருக்கம் 30-9-92 க்கு முன்பும், ஆய்வுக்கட்டுரை 31-10-92க்கு முன்பும் அனுப்பப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மாநாட்டில் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படும்.

இம்மலருக்கு மேற் குறிப்பிடப்பட்டுள்ள கருப்பொருள் தொடர்பான கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. தட்டச்சு வடிவில் இவை நான்கு பக்கங்களில் இருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கடையுடைத்து திருட்டு

(சுன்னாகம்)

நேற்று முன்தினம்[14.9 92] இரவு இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள இலட்சுமி ஸ்ரோர்ஸ் எனும் புட

## மாடுதிருடிய சிப்பாய் கைது

மாடு திருடிய சிப்பாய் ஒருவர் மாவெலப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார் 12 000 ரூபா பெறுமதியான இரண்டு எருதுகளைக் களவாடி 7,000 ரூபாவுக்கு விற்கும் போது இந்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரான சிப்பாய் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப் படுவார் என்று மாவெலப்

மாக நடந்துவரும் ஆயுதப் போராட்டம் குறித்து இதுவரை 'ஐலண்ட்' பத்திரிகைக்கு ஏற்படாத கவலையும், கரிசனையும் திடீரென இப்பொழுது ஏற்பட்டுள்ளது. ஆனால் இதுவரை போர் குறித்தும், இராணுவ வெற்றிகுறித்தும் எழுதிவந்த 'ஐலண்ட்' பத்திரிகைக்கு சடுதியாக அதற்கான இலக்குத் தெரியாமல் போனதன் மர்மம் என்ன என்பதுதான் ஆச்சரியமாகவுள்ளது.

இதுவரை போரில் கொல்பவர்கள் சிங்களவர்களாகவும், கொல்லப்படுபவர்கள் தமிழர்களாகவும் இருக்கும்/இருக்கவேண்டும் என்றே 'ஐலண்ட்' பத்திரிகை கருதியது. அதாவது, கொல்லப்படுபவர்கள் புலிகளும், அதன் தலைவர்களும், மற்றும் தமிழ் மக்களுமாக இருக்கும் என்றே இப்பத்திரிகை கருதியது ஆனால்,சிங்களச் சிப்பாய்களும், தமது 'புகழ்பூத்த' தளபதிகளும் போரில் மரணமடைபவர்களில் அடங்குவார்கள் என அவை கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.இக்கற்பனை கலைந்த பின்னர் தான், அதாவது இழப்புக்கள் சிங்களத் தரப்பில் ஏற்பட்ட பின்னர்தான் போருக்கான காரணம் குறித்து 'ஐலண்ட்' கேட்கின்றது.

ஆனால், இது பெரும் ஏமாற்று இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதற்கு பௌத்த சிங்கள பேரினவாதமே காரணம். இதில் அரசியல் வாதிகள், பௌத்த பீடங்கள் என்பனவற்றிற்கு எவ்வளவு பங்குண்டோ அவற்றிற்கு சற்றும் குறையாத அளவில் பத்திரிகைகளுக்கும் பங்குண்டு. அதில் ஐலண்ட் பத்திரிகைக்கும் பெரும் பங்குண்டு. இதில் இராணுவத்தினர் கருவிகள். இவர்கள் அரசாங்கத்தாலும், பௌத்த பேரினவாதிகளாலும் ஏன் பத்திரிகைகளால்கூட தமிழ் மக்கள் மீது ஏவப்பட்டவர்கள்.ஆனால்இறுதியில்இராணுவமும் தமது அபிலாசைகளையும் தீர்க்க முற்பட்டுக் கொண்டது.

அதாவது, பௌத்த சிங்களப் பேரினவாதிகள் கக்கிய இனவாதத்தை மக்கள் மத்தியில் விதைத்தவைகள் இப்பத்திரிகைகளே. மேலும், இந்த பத்திரிகைகள் என்றும் யுத்தத்தைப் பற்றியும், அதில் சிங்களவர் வெற்றியைப் பற்றியுமே பேசின, எழுதின. சிங்கள இராணுவம் தமிழ் மக்களைக் கொன்று குவித்தபோது அதனை இராணுவத்தின் அரிய சாதனை எனப்பறைசாற்றிக்கொண்டிருந்தவையும் இப் பத்திரிகைகளேயாகும்.

இதேவேளை, யுத்தத்தினால், உயிரிழப்புக்களும், பொருளாதார அழிவுமே ஏற்படும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டும் எனச்சில இராணுவ அதிகாரிகள் தமது அனுபவத்தைத் தெரிவித்தபோது அவர்களைத்திறமையற்றவர்கள் என ஒதுக்கும் அளவிற்குக் கூடச்சிலபத்திரிகைகள் சென்றன. யுத்தத்திற்கு ஏற்றமுறையில் இராணுவ அமைப்பு மாற்றியமைக்கப்பட்டபோதும் ஆயுத தளபாடங்கள் வாங்கிக்குவிக்கப்பட்ட போதும் இராணுவத்திற்குப் பாராட்டும், ஊக்கமும் கொடுத்தவர்களும் இப்பத்திரிகைகளே.

மேலும், சமாதான முயற்சிகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இப்பத்திரிகைகள் இருந்தன. அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்ச்சியை விரைவிலேயே முடிவிக்குக் கொண்டுவர உதவிய 'பெருமை' ஐலண்ட் பத்திரிகைக்கும் உண்டு. திரு. தொண்டமானுக்கு எதிராக ஓர் இனவாத புயலையே அவ்வேளையில் இப்பத்திரிகை கிளப்பிவிட்டது.

இவ்வாறாக, இனவாதம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட பத்திரிகைகள் தோல்விகளையும் இழப்புக்களையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது தமது நிலைப்பாட்டை மாற்றி போர் ஏன் நடக்கின்றது என இராணுவத்தைப்பார்த்து கேள்வி எழுப்புகின்றன. இது, நீ எங்கே போகின்றாய் என்று எய்தவன் அம்பைப்பார்த்துக் கேட்பது போன்றதாகும்.ஆனால், பேரினவாதப் பத்திரிகைகள் இவ்வாறு கேள்வி எழுப்புவதன் மூலம் தமது கடந்த காலவரலாற்றை மறைத்துவிடமுடியாது. ஏனெனில் அவர்களே தமது கடந்த காலத்தை அச்சில்பதித்து வெளியிட்டுள்ளனர்.

## ஐரோப்பிய சமூகம் கோரிக்கை

[ஹட்பீல்ட்]

யூகோஸ்லாவிய குடியரசான பொஸ்னியாவுக்கு மேலாக இராணுவ விமான சூன்ய பிரதேசம் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் செயல் முறைகளில் யூகோஸ்லாவியா பங்குபற்றுதவாறு தடுக்கப்பட வேண்டும் என்றும் கடந்த சனிக்கிழமை ஐரோப்பிய சமூக வெளிவிவகார அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விமான சூன்யப் பிரதேசம் ஏற்படுத்தப்பட்டால் இப்பிரதேசம் உள்ளூர்விமான நிலையங்களால் கண்காணிக்கப்படும் என்றும் தென் ஈராக் விமான சூன்யப் பிரதேசத்தைப் போல இராணுவ விமான ரோந்து மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் ஐரோப்பிய சமூக வட்டாரங்கள் தெரிவித்தன.

லண்டனில் நடைபெற்ற சமாதான மாநாட்டுக்குப் பின் சண்டையை முடிப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதால் சேர்பியா மீது புதிய தடைகளை விதிப்பதில்லை என்றும் தீர்மானித்துள்ளனர்.

சேர்பிய ஆயுத பாணிகள் தங்கள் கனரக ஆயுதங்களை சரஜிலோவில் ஐ. நா. கண்காணிப்பில் வைத்துள்ளனர். பொஸ்னியத் தலைநகரில் சண்டையை முடிக்க இது முதல் நடவடிக்கையாக அமையும் எனவும் கருதப்படுகிறது.

## உறுதிப்படுத்திய பின்னரே விளக்கமளிக்கவும்

(கொழும்பு)

கொழும்பில் வழிப்பயணிகளையோ வீட்டில் இருப்போரையோ சோதனையிட அல்லது விசாரிக்க முற்படுவோர் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்த பின்புதான் அவர்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என கோட்டைப் பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களானால் நிச்சயம் தங்கள் அடையாள அட்டையை காண்பிப்பார்கள் என்றும்,

ஏமாற்றுப் பேர்வழிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கோட்டை ரயில் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ரயில்ஏறச் சென்ற இரு பயணிகளை சிவில் உடையில் சென்ற இரகசியப் பொலிசார் விசாரிக்க அழைத்த போது எதுவித தயக்கமோ கேள்வியோ இன்றி பதில் அளித்ததுடன் தங்கள் உடைமைகளையும் அவர்களிடம் ஒப்படைக்க முன் வந்த போதே மேற்கண்ட அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

## ஈராக்கின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்

### அரபு லீக் கோரிக்கை

(கெய்ரோ)

ஈராக்கின் உள் விவகாரங்களில் பிறர் தலையீடு இருக்கக் கூடாது எனவும், ஈராக்கில் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் 21 அங்கத்தினர்களைக் கொண்ட அரபு லீக் கேட்டுக் கொண்டுள்ளது.

கெய்ரோவில் நடைபெற்ற அரபுலீக் வெளிநாட்டு அமைச்சர்களின்இரண்டுநாள்மாநாட்டின் முதலாவது கூட்ட முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அரபுலீக்கின் பொதுக்காரியதரிசியினால் வாசிக்கப்பட்ட அவ் அறிக்கையில் தென் ஈராக் மீது மேற்கு நாடுகள் விதித்துள்ள விமான சூன்யப் பிரதேசம் பற்றிக் குறிப்பிடப் படவில்லை இவ் விடயம் குறித்து அரபு லீக் அங்கத்தினர்களிடையே ஆழ்ந்த கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

வளைகுடா யுத்தத்தில் மேற்கு நாடுகளை ஆதரித்த எகிப்து, சிரியா போன்ற நாடுகள் விமானசூன்யநடவடிக்கை ஈராக்கை பிளவு படுத்த உதவும் என தெரிவித்துள்ளன. ஈராக்கைப் பாதுகாக்க தாம் அக்கறை கொண்டிருப்பதாக எகிப்திய வெளியுறவு அமைச்சர் அரபுலீக்மாநாட்டில் தெரிவித்தார்

### கப்பலில்

தேவையானமருந்துகள் நோய்களுக்கான சகல ஆவணங்கள் என்பவற்றையும் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (42)

### எந்நிலையிலும்

பாதிப்புடன் தாய் சேய் மரணங்களை வெகுவாக அதிகரிக்கச் செய்யும்.

இங்கு வாழும் மக்களுடைய உணவுப் பற்றாக்குறை, சுகாதார சீர்கேடு, மருத்துவவசதி இல்லாமையால் மிகப்பெரிய அளவில் குழந்தைகள் மரணமாவதுடன் குறைப்பிரவசங்களும் தாய் சேய் மரணங்களும் பெருமளவில் அதிகரித்து வருகின்றது இன்றைய யுத்த சூழ்நிலைகளால் போக்குவரத்து வசதிகளின்மை அரச திணைக்களங்களின் சேவைகள் சீரின்மைகளால் இவ் இழப்புகள் பதியப்படாது வெளிப்படாதுள்ளது 1990 யூன் மாதம் ஏற்பட்ட யுத்தம் இவர்களது வாழ்க்கையில் மேலும் சோதனையாக அமைந்துள்ளது.எரிபொருள், விவசாய இரசாயனங்கள், விவசாய உபகரணங்கள் தடை செய்யப்பட்டமையால் விவசாயச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விவசாயத்தையே நம்பி வாழ்ந்த மக்கள் முற்றாகத் தொழிலை இழக்க வேண்டிய நிலை உருவானது.

எனவே எமது இந் நிலைமைகளினைக் கருத்தில் கொண்டு பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வறுமையுடன் போராடுகின்ற எமது கோரிக்கையை பரிசீலித்து சாதகமானதோர் பதிலை அனுப்பி வைப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### இராணுவத்தின்

வருகிறது.

செட்டிகுளம் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வேறிடங்களில் வாழ்ந்து வருகின்றனர். அப்பகுதி பாடசாலைகள் நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இராணுவத்தின் உத்தரவால் வவுனியா கல்வித்திணைக்களம் இது விஷயத்தில் முடிவெடுக்க முடியாமல் திணறுவதாக அறியப்பட்டது (தி)

### 489 தொண்டர்

தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிரந்தரமாக்கப்படும் தொண்டர் ஆசிரியர்களின் நியமனக் கடிதங்களை தற்போது கொழும்பு சென்றுள்ள யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் தம்முடன் எடுத்து வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது. (பா)

### பலூனுக்கும்

என்று இராணுவம் அறிவித்துள்ளது.

சமீப காலமாக வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடி ஊடாக வடபகுதி நோக்கிபயணிகளால்கொண்டு செல்லப்பட்டபலூன்கள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்படுகின்றன. (தி)

கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கட்டுரை படித்தல், கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சி என்பன இம் மாநாட்டின் சிறப்பு அம்சங்களாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''21 ஆம் நூற்றாண்டை நோக்கி தமிழர்கள்'' என்னும் கருப்பொருளைத் தழுவிய ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன என்றும்,

ஆய்வுக் கட்டுரையின் சுருக்கம் 30-9-92 க்கு முன்பும்,

## கடையுடைத்து திருட்டு

(சுன்னாகம்)

நேற்று முன்தினம்[14.9 92] இரவு இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள இலட்சுமி ஸ்ரோர்ஸ் எனும் புடவைக்கடைஉடைக்கப்பட்டுபல்லாயிரக்கணக்கான ரூபாபெறுமதியுள்ள காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள் திருடப்பட்டன.

மேற்படிஉடைமைகள்யாவும் பண்டத்தரிப்பிலிருந்து உரிமையாளர் இடம் பெயர்ந்ததனால் கொண்டு வரப்பட்டவை என்பதை குறிப்பிடத்தக்கது. [11]

### தியாக

தது அத்துடன் அனைத்துப் பொது மக்களும் தமது வீட்டு வாயிலில் திலீபனின் உருவப் படங்களை வைத்திருந்தனர் இவ்வாறு வைக்கப்பட்ட உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தன இப்படத்துக்கு அனைத்துப் பொதுமக்களும் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர்,

இவற்றைவிட தியாக தீபம் திலீபனின் நினைவாக அடையாள உண்ணா விரதநிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்றது. காலைமுதல் மாலை வரை நடைபெற்ற இவ் அடையாள உண்ணா விரத நிகழ்ச்சிகளில் முதியவர்கள், சிறுவர்கள் உட்பட பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். நல்லூர் கந்தசுவாமி கோயிலடி, சுதுமலை அம்மன் கோயிலடி ஆகிய இடங்களில் நடைபெற்ற அடையாள உண்ணா விரத நிகழ்ச்சிகளில் அதிகளவுமக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் திலீபனின் நினைவு நாட்களை ஒட்டி பல்வேறு இடங்களிலும் பலசிரமதானப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. (க)

### தொடர்பகத்தில்

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட தொடர்பகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தொடர்பக பொறுப்பாளர் அருள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம் மாநாட்டில் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படும்.

இம்மலருக்கு மேற் குறிப்பிடப்பட்டுள்ள கருப்பொருள் தொடர்பான கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. தட்டச்சு வடிவில் இவை நான்கு பக்கங்களில் இருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாடுதிருடிய சிப்பாய் கைது

மாடு திருடிய சிப்பாய் ஒருவர் மாவெலப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார் 12 000 ரூபா பெறுமதியான இரண்டு எருதுகளைக் களவாடி 7,000 ரூபாவுக்கு விற்கும் போது இந்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரான சிப்பாய் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப் படுவார் என்று மாவெலப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## வீடமைத்து கொடுக்க முயற்சி

வடக்கு கிழக்கு போர் முனையில் அங்கவீனர்களாகும் படையினருக்கு வருடாந்தம் குறைந்தது 500 வீடுகளாவது அமைத்துக் கொடுக்கப் படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ண தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவத்தில் இவ்வாறு எண்ணாயிரம் பேர் அங்கவீனர்களாக உள்ளனர். வீடொன்று அமைப்பதற்கு குறைந்தது ஓர் இலச்சம் ரூபா வரை தேவைப்படும் எனவும் தெரியவருகிறது.

### சார்க்

மாலைதீவுக்கான பயணத்தை ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மேற்கொள்வார்.

சார்க் நாடுகளின் தலைவர்களுடன் நடத்தப்படவிருக்கும் பேச்சு வார்த்தைகளின் போது கடந்தஆண்டு டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற 6-வது சார்க் உச்சி மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் பற்றி முக்கியமாக ஆராயப்படும் எனவும் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

### வன்னி

டிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்காக புதுக்குடியிருப்பு ஒட்டிசுட்டான் பகுதியில் 400 குடிசைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து கொடுக்கவுள்ளது. இதற்கு 20 லட்சம் ரூபா செலவிடப்படுகின்றது.

இதேவேளை விவசாய நடவடிக்கைகளுக்கும் கடனுதவி வழங்கப்படுகிறது. இடம் பெயர்ந்தோருக்கான சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் குடிசைக் கைத்தொழில் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஈழநாதம்

# அன்றும் சிங்களவர்கள் இவ்வாறே ஓடினார்கள்

## - பிரேமதாசா

(கலாவெவ)

வடக்கு - கிழக்கு பகுதியின் எல்லைகளில் வாழும் சிங்களவர்கள் புலிகள் தாக்குவார்களோ என அஞ்சி வெளியேறுவதைப் போலவே கலாவெவ பகுதி மக்கள் தென்னிந்திய படையெடுப்புக்கு அஞ்சி றுகுணுப் பகுதியை நோக்கி ஓடினர்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அண்மையில் கலாவெவவில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கவினதும் இளவரசன் தத்துசேனனினதும், சிலைகளைத் திறந்து வைத்த பின்னர் இடம் பெற்ற பொதுக் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் இந்த நெருக்கடியான கால கட்டத்தை எதிர் கொள்ளும் முகமாக இளவரசன் தத்துசேனன் தோற்றமெடுத்தான். இளவரசன் தத்துசேனனைக் கைதுசெய்ய ஆக்கிரமிப்பாளர்கள் முயன்ற போது அவனது நெருங்கிய உறவினரும் பௌத்த துறவியுமான மகாநாம தேரரின் உதவியோடு அவன் தப்பிக்கொண்டான் அதன் பின்னர்தான் அநுராதபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தான் என் தெரிவித்தார்.

தத்துசேனன் ஆட்சிக்காலத்தின்போதும் அதிகாரப் போட்டி இருந்தது என்றும், அதன் காரணமாகவே காசியப்பன் தனது தந்தையையும், தமையனையும்அழிக்கவேண்டி நேரிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா மாணிக்கம்

(B. A. London)

மாவடி இல்லம், மாதனை, பருத்தித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய உபஅதிபர் செல்லப்பாமாணிக்கம் [B. A. London] அவர்கள் 14- 09- 92 இல் இறைவனடி சேர்ந்து விட்டார் இவர்யாழ்/ சிவப்பிரகாச வித்தியாலய முன்னாள் ஆசிரியரும், யாழ்/ உடுத்துறை மகா வித்தியாலயத்தின் உப அதிபருமாவார் இவரின் பூதவுடல் 15- 09- 92 மாலை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

வ. க. கோபாலகிருஷ்ணன்
மருமகன்

மாவடி,
மாதனை,
பருத்தித்துறை.

[3179]

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



களத்தில் 17 – 05 – 1973

களத்தில் 16 – 09 – 1991

### வீரவேங்கை லோஜி

(தர்மலிங்கம் கௌரிமலர்)

(கெற்பெலி, மிருசுவில்)

## நடேஸ்வரா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நடேஸ்வராக்கல் லூரி மீண்டும் 3 ஆம் தவணைக்காக ஸ்கந்தாவில் இன்று 16 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இடம்பெயர்ந்தோர் அக்கல் லூரியை விட்டு வெளியேறியமையை அடுத்து மீண்டும் மூன்றாம் தவணைக்காக இப் பாடசாலை இன்று முதல் இயங்க உள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

சித்திராதேவி

சோமசுந்தரம்

வீர

வேங்கை

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

வீரப் பிறப்பு 03 03-1973



வீரச் சாவு 16-09-1991

### லெப். சுந்தர்

(நல்லையா கோவிந்தராசா)

செல்வபுரம், முல்லைத்தீவு.

சுந்தர் நீ
இலட்சியத்திற்காக
இறந்த வேளையில்,
காற்றில் கலந்த-உன் கடைசி மூச்சு,
தமிழீழ எல்லைக்குள்,
தவழ்ந்து வருகிறது,
தத்திச் செல்லும் மழலைக்குள்ளும்,
வீரம் பிறககிறது?

இவ்வண்ணம்,
போராளி,
பொ. பிரதாபன்

(சி/5046)

மழலைச் செல்வத்தின்

## 2-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 12 3-1974



கோட்டையில் விதையாய் 16 9 1990

(கோட்டையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த)

### 2-ம் லெப். நிமலன் (சிட்டு)

[பாலசிங்கம் ஜெயவதனன்]

சென்று திரும்பா எம் மாவீரனின் கதையை
எமது மண்ணிலே
துயருடன் நாம் கூறுகின்றோம்
அவனது பெயர்......
எம் இதயங்களில் அச் சொல்
புனிதமாய் இருக்கட்டும்

## எரிமலை அனர்த்தம் இடம்பெறப் போவதில்லை

### ஆய்வுகளிலிருந்து முடிவு

(கொழும்பு)

தியத்தலாவ பகுதியில் எரிமலை அனர்த்தங்கள் எதுவும் நிச்சயமாக இடம் பெறப் போவதில்லை என ஆய்வுகளில் ஈடுபட்ட அடிப்படை கல்வி நிலைய விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

இந்தக்குழுவிற்குத்தலைமை தாங்கி ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் திஸநாயகா சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் கே. எச் ஏ விஜயதாசாவுக்கு இது பற்றி அறிவித்துள்ளார்.

எரிமலை குமுறுவதாக கூறப்படும் வதந்திதேவையற்ற பீதி என்றும் ஒரு மீற்றர் காய்ந்த நிலக்கரீப் படலமே பிரஸ்தாப இடத்தில் ஏற்பட்ட உஷ்ண அதிகரிப்பிற்கு காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

இப் பிரதேசத்தில் படையினர் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதால் குண்டு அல்லது சன்னம் ஏதாவது ஒரு பொருள் இக் கரித்தூள் படிவின் மீது விழுந்து புகை கிளம்பியிருக்கலாம் என்றஇராணுவ அதிகாரி ஒருவரின் கூற்றின் சாத்தியத்தையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறித்த அப்பகுதியில் வெப்பம் படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

மருதனார்மடம் புகையிரத வீதி அருகில் இளையப்பு தம்பிமுத்து, திருமதி தம்பிமுத்து உட்பட நான்கு அடையாள அட்டைகளும் சில ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர் ஆதாரம் காட்டி ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

★

பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதியில் முல்லையடி வைரவர் ஆலயம் முன்பாக திறப்புக் கோர்வை ஒன்று நேற்றுமாலை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம்காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## தமிழீழ காவல் துறை பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் \ காவலர் தரங்கள்

தகைமைகள்:- 8ஆம் வகுப்புத் தொடக்கம் க.பொ.த. (உயர்தரம்) வரை

உயரம்:- 5 , 6 ''

வயது:- 18—30 வரை.

மேற் கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 21. 09 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறை அலுவலகத்திற்கு நேராக சமுகந் தரவும் தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை

(சி/5057)

## ஓராண்டுகண்ணீர்ப்பூக்கள்

காவிய மண்ணில் 1972 – 10 – 03



காவியக் கல்லறையில் 1991 – 09 – 16

களத்தில் 17 — 05 — 1973



களத்தில் 16 — 09 — 1991

## வீரவேங்கை லோஜி
(தர்மலிங்கம் கௌரிமலர்)
(கெற்பெலி, மிருசுவில்)

தமிழீழத் தாகம் கொண்ட வேங்கையே ''லோஜி''
காலத்தால் அழியாத சரித்திரம் ஒன்றை
களத்திலே படைத்தாய்
தமிழீழ தேசத்தை நோக்கியே நடந்தாய்
பாங்குடன் போர் புரிந்து—நீ
பகைவரை வீழ்த்தும் வேளையில் ...
தாங்கினாய் குண்டை
செந்தமிழ் திசையெல்லாம் வீசும் தென்றலே (லோஜி)
மிஞ்சிய பணியினை முடித்திட
சபதமொன்றெடுப்போம்.

-நண்பர்கள்

(3171)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

வீர ஜனனம் 25 — 08 — 1976



வீரச் சாவு 16 — 09 — 1991

### வீரவேங்கை கிரிசாந் (கல்கத்)
[மார்க்கண்டு மதனரூபன் (பழம்)]

செந்தமிழன் விடிவிற்காய்
செங்களம் சென்று
வீர வரலாறு படைத்த
மழலை வீரனே
மங்காது உன் புகழ்

தமிழினத்தின் விடிவிற்காய் உன் உயிர் தந்த தன் மானத் தமிழனே உன் இலட்சியப் பாதையை நாமும் தொடருவோம்.

– நண்பர்கள்

(3158)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நடேஸ்வராக்கல் லூரி மீண்டும் 3 ஆம் தவணைக்காக ஸ்கந்தாவில் இன்று 16 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இடம்பெயர்ந்தோர் அக்கல் லூரியை விட்டு வெளியேறியமையை அடுத்து மீண்டும் மூன்றாம் தவணைக்காக இப்பாடசாலை இன்று முதல் இயங்க உள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
செல்வி
சித்திராதேவி
சோமசுந்தரம்
### வீர வேங்கை துவாஞ்சலி



தாயின்மடியில்
11-01-71
தாயகமடியில்
16-09-91

ஆண்டொன்று போனாலும்
ஆறாது எம் துயரம்
பாசமிகு மகளே
பாசமுடன் வளர்த்தோமே
எமதருமைச் சோதரியே
எமை நீயும்மறந்தாயோ
பாசத்தை விட -வாழும்
தேசத்தை நேசித்தாய
தேசத்தின் விடிவிற்காய்
பாசததை மறந்தாயோ
மணலாற்றில் மடிந்தாயோ
மாவீரர் ஆனாயோ
தீருமோ எம் சோகம்
திரும்பி வர மாட்டாயோ

- தந்தை, தாய், உடன் பிறபபுக்கள், மைத்துனர்கள், சுற்றத்தார், நண்பர்கள்.

புளியங்குளன்,
ஒட்டுசுட்டான். (3176)

12-3-1974



16-9-1990

(கோட்டையில் இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த)

### 2-ம் லெப். நிமலன் (சிட்டு)
[பாலசிங்கம் ஜெயவதனன்]

சென்று திரும்பா எம் மாவீரனின் கதையை
எமது மண்ணிலே
துயருடன் நாம் கூறுகின்றோம்
அவனது பெயர்......
எம் இதயங்களில் அச் சொல்
புனிதமாய் இருக்கட்டும்
அவனை பூசிககவேண்டிய ஒரு மலராக
எங்கள் இதயத்தில் இருத்துவோம்
கோட்டையில் துப்பாக்கி வேட்டுக்கள்
அவன் சிரத்தை நொறுக்கின
அன்புள்ளவர்களே
அவன் எப்போது வருவான் எனக் கேளாதீர்
மக்கள் எப்போது கிளர்ந்தெழுவார்கள்
என்று மட்டும் கேளுங்கள்.


என்றும் மழலைச் செல்வத்தின்
துயரால் வாடும்
அம்மா,
சகோதர சகோதரிகள்

தும்பளை,
பருத்தித்துறை.

(3203)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 05 — 06 — 1972



வீரச்சாவு 16 — 09 — 1991

### 2 ஆம் லெப். எட்றிச்
[சிவசாமி கிருபாகரன்]

இலங்கை என்னும் ஒருதீவில்
இலங்குவது இரு நாடென்றே
உலகினுககு எடுததுரைக்க
விலையில்லா உனதுயிரை
தானமெனத் தந்தவனே!
எங்கள் தங்கமகனே ! - நீர்
சிந்திய செங்குருதி காட்டும்
பாதையிலே பயணம் தொடர்கிறது

திக்கம்
பருத்தித்துறை. (3184)

– குடும்பத்தினர்

(சி/5057)

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை

## ஓராண்டுகண்ணீர்ப்பூக்கள்

காவிய மண்ணில்
1972 — 10 — 03



காவியக் கல்லறையில்
1991 — 09 — 16

### வீரவேங்கை காஞ்சனா
(சாந்தி இராசகுமார்)

ஓ! காஞ்சனா!
வரலாறு படைத்திட்ட மணலாறில்
வரவெதிர் கொண்டாயோ உன்கனம்தனை
மரணித்தது உடல்தான்
மனமுமல்ல உன் இலட்சியமுமல்ல - அங்கு
வீசுங்காற்றுக்கூட காஞ்சனா! என
வீறிடுதே கண்ணே! - நீ
வீரநடை பயின்ற பாதையோர நாணல்கூட
வீரியவள் காஞ்சனா எங்கே என்கிறதே
வானவெளி முகிலினங்கூட
வானில் வாழும் உனைத்தான் தேடுகிறதாம்
நீ மறைந்திட்டாய் என நாம் கூற
இல்லையாம் காஞ்சனா காவியமாகிட்டாள்
என கார்மேகம் மழையென
ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறதே

உமது ஆத்ம சாந்திக்கு ஓராயிரம் கண்ணீப் பூக்கள் சமர்ப்பணம்.

இங்ஙனம்
– குடும்பத்தினர்

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(3174)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 15-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5639

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
26-0736, 26-6320, 28-1794, 41-8292, 28-9259, 24-6475, 26-5882, 24-6161, 28-6624, 41-7292.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
22-9005, 42-1182, 26-4727, 26-6897, 40-6979, 24-6480, 42 9112, 26-6526, 41-2227, 42-8316, 24-4282, 28-2156, 27-2016 26-9266, 26-6029, 24-4491, 42-1178, 26-3518, 28-6546, 26-0525.